தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035.

தொலைபேசி எண்.044-2951 5590

ஆணை நாள். 02.11.2026

முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,

மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண் : CP- 4766/A/2024

திரு.R.கிருஷ்ணமூர்த்தி .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின்
நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
சேலம் மாவட்டம் - 636 005. .. பொது அதிகார அமைப்பு

ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 02.11.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.R.கிருஷ்ணமூர்த்தி, அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரருக்கு இவ்வாணையத்தால் அனுப்பப்பட்ட அழைப்பாணை Deceased எனத் தெரிவிக்கப்பட்டு இவ்வாணையத்தில் திரும்பப் பெறப்பட்டுள்ளது. ஆணையம் இதனை பதிவு செய்கின்றது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு.சு.ரமேஷ் பொதுத் தகவல் அலுவலர் / வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 10.09.2022 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், சேலம் மாவட்டம், பன்னப்பட்டி ஏரி வரை செல்லும் ஓடையின் நிலத்தில் ஆக்ரமிப்பு செய்து கட்டியுள்ள சுற்றுச் சுவர் கட்டிடத்தை அகற்ற கோரி அளிக்கப்பட்ட மனு மீதான நடவடிக்கையினை தகவல்களாக வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர் 10.11.2022 நாளிட்ட பிரிவு 19(1)–ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர், 09.10.2024 நாளிட்ட பிரிவு 18(1)–ன் கீழ் புகார் மனுவை தாக்கல் செய்துள்ளார்.. அப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 02.11.2026 முற்பகல் ஆணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் 10.09.2022 அன்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்ததில் ரூ.10/–க்கான நீதிமன்ற வில்லை ஒட்டப்படாததால் மேற்கண்ட விண்ணப்பம் மனுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு 11.11.2022 நாளிட்ட கடிதத்தின் படி சேலம் வட்டாட்சியருக்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்பட்டுள்ளது என ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை Deceased எனத் தெரிவிக்கப்பட்டு இவ்வாணையத்தில் பெறப்பட்டதை இவ்வாணையம் பதிவு செய்தும், பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவல்களை இவ்வாணையம் பதிவு செய்து, இவ்வழக்கினை இவ்வாணையம் தள்ளுபடி செய்து உத்தரவிடுகின்றது.

ஒம்/– (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

வழக்கு எண் CP- 4766/A/2024

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக
உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
சேலம் மாவட்டம் – 636 005.

மனுதாரர்:

திரு.R.கிருஷ்ணமூர்த்தி
அனுரா அப்பார்ட்மெண்ட்ஸ்,
3வது தளம், எண் 1,
அங்கம்மா காலணி,
சேலம் மாவட்டம் – 636 009.

தமிழ்நாடு தகவல் ஆணையம்
11 NOV 2026
சென்னை-600 05

DESPATCHED

Copy to File
Je/PA 02.11.2026